1979 மார்ச் 7]

பாமணி உரமணி ஆலை.

*வினா எண் 259—திரு. மு. அம்பிகாவதி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னையில் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22 ஆம் நாள் அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பாமணி உரமணி ஆலை நிர்வாகச் சீர்கேடு பற்றிய விண் ணப்பம் ஏதும் அளிக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) விண்ணப்பத்தில் கண்டுள்ள விவரங்கள் அரசின் பரி சீலனையில் உள்ளன.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, விண்ணப்பம் கொடுக்கப்பட்டது 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22 ஆம் நாள் அன்று. இன்றைக்கு தொழிலாளர் பிரச்சனை மிகவும் சூடாக இருக்கிறது. அதைத் தணிக்க வேண்டியது அமைச்ச ருடைய பொறுப்பு. அதற்காக விண்ணப்பம் கொடுக்கப்பட்டது. அதில் இருக்கும் விவரம் என்ன? எப்போது நடவடிக்கை எடுக் கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ பல ஆண்டுகளுக்கு முன்னால் விண்ணப்பம் கொடுக்கப்பட்டதைப் போல சொல்கி றார்கள். என்னிடம், தமிழக அரசிடம் விண்ணப்பம் தரப்பட்ட தேதி 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22 ஆம் நாள். அதிலே சில விவரங்களை அளித்தார்கள். கடந்த 5 மாதங்களாக அதற்கு தகுந்த விசாரணை செய்து—3 குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள்—அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச் சரவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே நல்ல தரமான உரம் சொசைட்டிகளில் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வி முடிந்து விட்டது.

திரு. மு. அம்பிகாபதி : இதுவும் உரமான கேள்வி என்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்டார்கள் என்று நினைக்கிறேன். தலைவரவர்களே, அங்கிருந்த உற்பத்தி மேலாளர் பழி வாங்கும் நோக்கத்துடன் சில தொழிலாளர்களை இந்த உரத் தொழிற்சாலையிலிருந்து—கண்ணன் போன்ற தொழிலாளர்களை திருநெல்வேலி போன்ற மாவட்டங்களுக்கு—மாற்றியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அதை பரிசீலித்து, அந்தத் தொழிலாளர்களை மீண்டும் பாமணி உரமணி தொழிற்சாலைக்கு மாற்ற துரித நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, அவர்கள் கேட்டது மூலக் கேள்விக்கு உடன்பாடு உடையதல்ல. என்றாலும் கூட தனியாக இதற்கு விவரம் அளித்தால் உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'' கேர் '' நிறுவனத்தால் கட்டப்பெற்ற வீடுகள்.

*வினா எண் 260—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) '' கேர் '' ஸ்தாபனம் தமிழ்நாட்டில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எத்தனை வீடுகளைக் கட்டி மாநில அரசிடம் ஒப்படைத்துள்ளது ?

(ஆ) அவை எங்கெங்கு கட்டப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) அவை முன் ஒரு விவர *அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த '' கேர் '' நிறுவனம் மூலம் கட்டித்தரப்பட்ட குடிசை ஒவ்வொன்றும் எத்தனை ரூபாய் செலவில் கட்டப்பட்டன ? அத்தகைய வீடுகள் சரிவர பராமரிக்கப்படாமல், தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பெரும்பாலான குடிசைகள் தாழ்வான பகுதிகளில் கட்டப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக மாயூரம் பகுதியில் 50 குடிசைகள் கட்டித் தந்திருக்கிறார்கள், அவை தாழ்வான பகுதியில் கட்டப்பட்டிருப்பதால் மழைக் காலங்களில் வெள்ளத்தில் மூழ்கி, அவர்கள் படுப்பதற்குக்கூட இடமில்லாமல் தவிக்கிறார்கள். எனவே, அத்தகைய வீடுகளை அரிசன நலத்துறையின்

*569 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.